வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 16 of 2021

வழக்கு சாட்சி - PW 7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சுப்புரத்தினம் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| தந்தை பெயர் | : | ராமசாமி | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 09.03.2026.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை** :

1) நான் தற்போது நீலகிரி மாவட்டம் மசினக்குடி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.03.2018 ஆம் தேதி பல்லடம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது பல்லடம் காவல் நிலைய குற்ற எண் 189/2018 சட்டபிரிவுகள் 279,337,304(A) இதசவில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் மயில்சாமி என்வர் வழக்கு பதிவு செய்து முதற்கட்ட புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு. செந்தில் பிரபு என்பவர் மேற்கொண்டு தொடர் புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்த வழக்கு கோப்பை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 13.03.2018 ஆம் தேதி வழக்கு கோப்பை பெற்று சம்பவ இடத்தை பார்வையிட்டதில் உதவி ஆய்வாயளரிடம் கூறிதையே என்னிடம் கூறியதால் நான் தனியாக பார்வை மகசர் மற்றும் மாதிரி தயார் செய்யவில்லை. அ.சா.1 திருமூர்த்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2)வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனங்களான TN 41 X 9595 என்ற Chevorlet காரை சந்திபோஸ் என்பவருடன் ஆஜரானவரை கைது செய்து தக்க பிணையில் விடுவித்தேன். சம்மந்தபட்ட அந்த வாகனத்தை வாகன ஆய்வாளருக்கு மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தினேன். அன்றைய தினமே வாகனத்தின் உறிமையாளர் சங்மேஸ்வரி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 23.03.2018 ஆம் தேதி அன்று வழக்கில் சம்மந்தப்பட்ட மற்றொரு வாகனமான TN 38 F 1738 என்ற டிவிஎஸ் ஸ்டார் சிட்டி என்ற மோட்டார் வாகனத்தைமோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தினேன். 09.04.2018 ஆம் தேதி விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனங்களை ஆய்வு செய்து அறிக்கை வழங்கிய மோட்டார்வாகன ஆய்வாளர் பாஸ்கர் அவர்களை விசாரித்து ஆய்வறிக்கை பெற்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த ஆய்வறிக்கைகள் முறையே அ.த.சா.ஆ. 6 மற்றும் 7 ஆகும்.

3) வழக்கில் காயம்பட்ட குருமூர்த்தி அவர்களுக்கு சிகிச்சை அளித்த REX Ortho Hospital டாக்டர் பிரேமா அவர்களை விசாரித்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அவை முறையே **அ.த.சா.ஆ 8 மற்றும் 9** ஆகும். பின்னர் வழக்கில் காயம்பட்ட திருமூர்த்தி மற்றும் இறந்துபோன பழனிச்சாமிக்கு முதல் சிகிச்சை அளித்த டாக்டர் ஜமுனா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பழனிச்சாமியின் இறப்பினை உறுதி செய்து இன்டிமேசன் கொடுத்த கோவை மருத்துவர் விஜயராகவன்விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இறந்து போன பழனிச்சாமி பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்டு கோவை சிஎம்சி மருத்துவமனை மருத்தவர் நந்தக்குமார் அவர்களை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த பிரேத பரிசோதனை அறிக்கை **அ.த.சா.ஆ. 10** ஆகும். வழக்கில் காயம்பட்ட திருமூர்த்திக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பதால்

இவ்வழக்கின் சட்டப்பிரிவான 279,337,304(A) இதச பிரிவில் இருந்து 279,338,304(A) இதசவாக பிரிவு மாற்றம் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். அந்த பிரிவு மாற்ற அறிக்கை **அ.த.சா.ஆ.11** ஆகும். இத்துடன் புலன் விசாரணை முடித்து 09.04.2019 ஆம் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

1) இந்த வழக்கில் நான் சொன்ன விதத்தில் புகார்மனு பெறப்படவில்லை என்றும், வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பார்வை மகசர் மற்றும் வரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்காவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து பின் ஆலோசனை செய்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்குக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2026.03.09 18:06:52 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.